தூத்துக்குடி ஒன்றியம் புதுக்கோட்டையில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், கே.கே. ஆர்.ஜெயக்கொடி, பை. மூ.ராமஜெயம், தங்கதுரை பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, அக். 20 - கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி சிங்காரப்பேட்டையில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாமை கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், பச்சிளம் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துதல், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் பயனடையும் வகையில் “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை நாட்களில் தலா 3 முகாம்கள் என 10 வட்டாரங்களில் 30 மருத்துவ முகாம்களும், மாநகராட்சியில் 3 முகாம் என மொத்தம் 33 மருத்துவ முகாம்கள் நடைபெறது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி சிங்காரப்பேட்டையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சைக் கான மருத்துவ ஆலோசனை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் 2,000 த்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்து சிகிச்சை பெற்றனர். மேலும் இம்மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டன.

மேலும் உயர் சிகிச்சை தேவைப்படுவோர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படனர்.

தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் இந்த மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள், கட்டுமான தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை வழங்கி, மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால் வழங்குவதற்கான அளவுகள் மேற்கொள்ளும் பணிகளை பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட துணைச் செயலாளர் சந்திரன், பொருளாளர் கதிரவன், ஒன்றியச் செயலாளர்கள் எக்கூர்செல்வம், மூன்றாம்பட்டி.குமரேசன், ரஜினி செல்வம், பேரூர்ப் பொறுப்பாளர் பார்த்திபன் உள்ளிட்ட நிர்வாகிகள், மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்

# 210 இடங்களிலிருந்து 57.84 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் அகற்றம்!

சென்னை, அக்.20- பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாள்தோறும் சராசரியாக 6,500 மெட்ரிக் டன் திடக்கழிவுகளும், 1,000 மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் கட்டுமான இடுபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொதுமக்கள் குப்பைகள் மட்டுமல்லாது, தங்களது வீட்டில் உள்ள பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், மக்களுக்கு இதன் காரணமாக ஏற்படும் இடையூறு மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், தமிழ்நாட்டில் முதல் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோஃபாக்கள்,மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை அகற்றிடும் புதிய நடவடிக்கை 11.10.2025 அன்று தொடங்கப்பட்டது. இதில் 145 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 45.64 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இந்த வாரத்தில் முன்கூட்டியே தகவல் தந்த 210 நபர்களின் இடங்களிலிருந்து 57.84 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் இன்று (18.10.2025) பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டப்பட்டது. இப்பணியில் 83 வாகனங்களும், 200க்கும் மேற்பட்ட பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் “நம்ம சென்னை” செயலியில் (App) பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதன் அடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள்.

இந்த நடவடிக்கையால், பொதுமக்கள் பொது இடங்களில் பழைய பொருட்களை தூக்கி எறிவதைத் தடுப்பதுடன், தெருக்களை சுத்தமாக வைத்திருக்கவும், அனைவருக்கும் சுகாதாரமான வாழ்விடச் சூழலை உருவாக்குவதற்கும் வழிவகை ஏற்படும்.

சென்னை மாநகரினை தூய்மையாக வைத்துக் கொள்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் நல் ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம். இரா.மூர்த்தி ஏற்பாட்டில் இராயபுரம் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் 2,000 நபர்களுக்கு பட்டாசு, பரிசு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி இராயபுரம் அறிவகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., கலந்துகொண்டு நிர்வாகிகளுக்கு பரிசுத்தொகுப்பினை வழங்கினர். இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள்,மாநில,மாவட்ட, பகுதி,வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் BLA2, BDA, BLC மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு அரசுதுறை சார்பில் பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க 24-10-2025, 25-10- 2025 ஆகிய தேதிகளில் தென்காசிக்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு 24-10-2025 அன்று சங்கரன்கோவிலில் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் ச.தங்கவேலு, பரமகுரு, இல.சரவணன், மனோகரன்,ராஜதுரை, புனிதா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பருவ மழையை எதிர்கொள்ள

# நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் ஒருங்கிணைப்புக் குழு!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.அக்.20- பருவ மழையை எதிர்கொள்ள

நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.பொது மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட வேண்டும்.என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய நெல்லை மேற்கு மாநகர தி.மு.க பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் பகுதி வாரியாக ஒருங்கிணைப்புக் குழு தலைவர்கள் மற்றும் நிர்வாகி கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி நெல்லை பேட்டை கிழக்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் என்ற கோபி மற்றும் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் 919943602232, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன் 9965267936,மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில்குமார் 9344095801,மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் தளபதி ஆறுமுகம் 9789580386, மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் கணேசபெருமாள்9944628889, நெல்லை மேற்கு மாநகர மகளிர் துணை அமைப்பாளர் பிந்து செய்யது 9894578750, நெல்லை பேட்டை மேற்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் சங்கர்,மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் 9442290613, மாநகர விவசாய அணி தலைவர் எஸ்.எஸ்.முத்து 9688643890, மாநகர சிறுபான்மை யினர் அணி சார்லஸ் முத்து ராஜ் 9865167373,மாநகர தொழிலாளர் முன்னாள் துணை அமைப்பாளர் முத்து சுப்பிரமணியன் 9597895690, நெல்லை பேட்டை பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சாதிக் 6385456655, துணை அமைப்பாளர்கள் மணிகண்டன் 9597944459,கோமதிநாயகம் 8778025415, தச்சநல்லூர் வடக்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர்

டாக்டர் சங்கர குமார், மேற்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் வினோத்குமார் 9944357369, மாநகர பிரதிநிதி சிவா 9787671258, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் துணை அமைப்பாளர் சிவக்குமார் 9940095688, மாநகர அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் முறுக்கு கடை கணேசன் 9790072404,மாநகர தொழிலாளர் அணி முன்னாள் தலைவர் சங்கர் கணேஷ் 7448888855, மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார் 9442077019, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் முருகன் 8012460666 ஆகியோர் செயல்படு வார்கள்.

மேலும்அந்தந்த பகுதிக் குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், தி.மு.க.சொந்தங்கள் ஆகியோர் இணைந்து கள பணியாற்றுவார்கள்.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையால் ஏற்படும் மழை நீர் தேக்கம்,மரம் விழுதல்,மின்வெட்டு, மின் கசிவு ஆகிய பாதிப்புகள் ஏற்பட்டால் நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தை தொடர்பு கொள்ள வாட்ஸ் அப் மற்றும் தொலைபேசி எண் 87547 98163 ஆகிய எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பகுதி நிர்வாகிகள்,மாநகர பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள்,நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள் வார்டு வாரியாக பருவமழை காலத்தில் பொதுமக்களுக்கு உதவும் பணிக ளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இரா.மாரிமுத்து வரவேற்புரை ! நாகை

# நகரக் கழக நிர்வாகிகள் - வார்டு கழக நிர்வாகிகள் கலந்துரையாடல்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை! மு.லோகநாதன் பங்கேற்பு!

நாகை, அக். 20 - நாகை மாவட்டம் நாகையில் நாகை நகரக் கழக நிர்வாகிகள், வார்டு ச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நகரக் கழக அவைத் தலைவர் இரா முருகையன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து வரவேற்றார்.

மாவட்டக் கழகப் பொருளாளர் மூன்று லோகநாதன் நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், சித்ரா குலோத்துங்கன், ஆர்.ரமணி, அபுபக்கர் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என். கௌதமன் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை ஆர்ஆர் குலோத்துங்கன் எஸ்.பால்ராஜ் மாவட்ட சார்பணி துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரதீப், ஆர்.ஆர்.பாரி, நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்யன் மற்றும் வார்டு கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் சார்பணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முடிவில் நாகை நகர கழக துணை செயலாளர் வெற்றிலை கடை சிவா நன்றி கூறினார்.

கூட்டத்தில் நாகை நகரத்திற்கு உட்பட்ட 26 வார்டுகளிலும் வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள் தங்கள் வார்டுகளில் உள்ள வாக்குச் சாவடி குழு உறுப்பினர்களை வார்டு கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைத்து

தலைமைக் கழகத்தால் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகளில் 100 வாக்காளர்கள் பற்றிய விவரங்களை வீடு வீடாகச் சென்று முழுமையாக பதிவு செய்திட வேண்டும் என்றும். இந்த பணியில் பாக நீலை முகவர்கள் இணைத்து பணியாற்றி தங்களுக்கான பணியை சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் 2026 சட்ட மன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளை வெல்வோம் என்பதற்கிணங்க நாகை நகரத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும், வார்டு கழகங்களில் கழக நிர்வாகிகளுடன் இணைந்து கழக அரசின் சார்பில் நாகை நகரத்திற்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகள் மற்றும் மக்கள் நல பணிகள் குறித்தும், கழக அரசின் சாதனைகளான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வர் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், நான் முதல்வன் திட்டம், உள்ளிட்ட பல திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி கழக வெற்றிக்கு உழைத்திடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,ஆணையாளர் மரு.மோனிகா ராணா ஆகியோர் திருநெல்வேலி மண்டலம் காட்சி மண்டபம் அருகில் பர்வத சிங்ராஜா தெரு பகுதியில் உள்ள பெரிய மழைநீர் வடிகால் ஓடை தூர்வாரும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் கண்காணிப்பு பொறியாளர் கண்ணன்,உதவி ஆணையாளர் நாராயணன்,உதவி பொறியாளர் தன்ராஜ் உள்பட பலர் உள்ளனர்.